

சைதை மேற்கு பகுதி தி.மு.க. சார்பில் 139வது வட்டம் ஜாபர்கான் பேட்டை சென்னை உயர்நிலைப் பள்ளியில் 10 ஆம் வகுப்பு பொதுத் தேர்வில் 500க்கு 400க்கு மேல் மதிப்பெண் பெற்ற மாணவ, மாணவியருக்கு 1 கிராம் தங்க நாணயம் சைதை பகுதி அவைத் தலைவர் களக்காடி எல்லப்பன் தலைமையில் அமைச்சர் மா.சுப்பிரமணியன் 17 மாணவ – மாணவிகளுக்கு தங்க நாணயம் வழங்கினார். மற்றும் பகுதி செயலாளர் எம்.கிருஷ்ணமூர்த்தி, மாமன்ற உறுப்பினர்கள் வழக்கறிஞர் எம்.ஸ்ரீதரன், வழக்கறிஞர் ப.சுப்பிரமணி, தா.மோகன்குமார், வி.பி.ஜானகிராமன், சைதை சாதிக், அட்கோ கமலநாதன், சை.மு.சேகர், எம்.நாகா மற்றும் பலர் கலந்துகொண்டனர்.



காஞ்சிபுரம் தெற்கு மாவட்டம் சாலவாக்கம் ஊராட்சி ஆனம்பாக்கம் ஊராட்சி அ.தி.மு.க. கிளைச் செயலாளர் செந்தில்குமார் தலைமையில் அ. தி. மு. க .இளைஞர் அணி சௌந்தர பாண்டியன் உள்ளிட்ட அ.தி.மு.க. வினர், பா.ம.க, இளைஞரணி ரமேஷ் தலைமையில் வசந்தகுமார் (பா.ம.க. இளைஞரணி), பாமக ஐயப்பன் உள்ளிட்ட 25 க்கும் மேற்பட்ட அ.தி.மு.க. பா.ம.க. வினர் அக்கட்சிகளில் இருந்து விலகி மாவட்டக் கழகச் செயலாரும், உத்திரமேரூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினருமான க.சுந்தர் முன்னிலையில் கழகத்தில் இணைந்தனர். சாலவாக்கம் ஒன்றிய கழகச் செயலாளர் டி.குமார், ஆனம்பாக்கம் ஊராட்சி சேர்ந்த கழக நிர்வாகிகள், முன்னோடிகள், பொறுப்பாளர்கள் உடன் இருந்தனர்.

### அதிக வாடிவாசல்கள் கொண்ட புதுக்கோட்டையில் - ஜல்லிக்கட்டுக் களம் அமைத்திடுவீர்!

# புதுக்கோட்டை ‘சிப்காட்’ பகுதியை தரம் உயர்த்தி - இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பை அதிகரித்திடுவீர்!

## சட்டப் பேரவையில் - புதுக்கோட்டை டாக்டர் வை.முத்துராஜா கோரிக்கை!

சென்னை, ஜூன் 30-

சட்டப் பேரவையில் - இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை மானியக் கோரிக்கை மீதான விவாதத்தில் கலந்துகொண்டு பேசிய புதுக்கோட்டை தொகுதி கழக எம்.எல்.ஏ., டாக்டர் வை.முத்துராஜா, “புதுக்கோட்டையில் ‘சிப்காட்’ பகுதியை தரம் உயர்த்தி இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பினை அதிகரித்திடுவீர்!” என்பது உள்ளிட்ட கோரிக்கைகள் விடுத்துப் பேசினார்.

சட்டப் பேரவையில் வை.முத்துராஜா பேசியதாவது:-

பேரவைத் தலைவர் அவர்களே, நம் நெஞ்சம் நிறைந்த, நினைவில் வாழும் தலைவர்கள், தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, நவீன தமிழகத்தின் சிற்பி, முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களை இவ்வவையில் நினைத்து, நினைத்து வணங்குகிறேன்.

வாழ்வில் கலங்கி, தேங்கி நின்ற மகளிர்தம் வாழ்வு சிறக்க, கலைஞர் மகளிர் உரிமைத் தொகைத் திட்டம், ஏழைப் பிள்ளைகளின் எட்டாக் கனியான ஆட்சிப் பணியை எட்டிப் பிடிக்கும் தூரத்தில் தந்திட நான் முதல்வன் திட்டம். மகளிர்தம் சிறகுகள் எல்லையின்றி சுதந்திரமாய் பறந்திட, இன்று இந்தியாவே வழிமொழியும், விடியல் பயணத் திட்டம். பசித்த வயிற்றோடு பாடம் படிக்கும் பிள்ளைகளை பெற்றெடுத்த தாய், தந்தைக்கும் மேலாய் சத்தான சிற்றுண்டி வழங்கிடும் முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம். பெண் பிள்ளைகளை சூழ்ந்திருந்த இருட்கதவை உடைத்தெறிந்து, உயர் கல்வியை உறுதி செய்திட, உங்கள் சிந்தையில் உதித்திட்ட மாதம் ரூ.1000 வழங்கும் புதுமைப் பெண் திட்டம். ஆண் பிள்ளைகள் அடுத்த அடி எடுத்து வைக்க அரவணைத்துச் செல்லும் அப்பாவின் இடத்திலிருந்து மாதம் ரூ.1000 வழங்கும் தமிழ்ப் புதல்வன் திட்டம். மருத்துவம் பார்க்க அலைந்து, திரிந்து, கலங்கி நின்றவர்களின் கண்ணீரை துடைத்திட மக்களைத் தேடி மருத்துவம் திட்டம். மக்கள் மனம் அறிந்த, மக்கள் மனம் நிறைந்த, மக்கள் நலத் திட்டங்களால் நாடு போற்றிடச் செய்யும் நாட்டின் நம்பர் 1 முதல்வர் அவர்களே, வரலாற்றுச் சிறப்புமிக்க திட்டங்களை வாரி வழங்கிய வள்ளலே, தங்களை வணங்குகின்றேன்.

தலைவரின் கண்ணசைவில் களம் வெல்லும் சின்னவரே! மாநில உரிமை மீட்க சேலத்தில் இளைஞர் அணி களம் கண்ட எங்கள் மன்னவரே! எதையும் தாங்கும் இதயமே, இயக்கத்தைத் தாங்கி நிற்கும் எங்கள் எதிர்கால இமயமே, தலைவர் கலைஞரின் முழக்கமாய், தமிழக முதல்வரின் சிந்தனையாய், காலத்திற்கும், களத்திற்கும் ஏற்ப கடமையாற்றி, கழகத்தின் தலைவருக்குத் துணை நிற்கும் எங்கள் இளந்தலைவரே! பெரியாரின் பகுத்தறிவாய், அண்ணாவின் தொலைநோக்காய், முத்தமிழறிஞரின் கனவாய், தமிழக முதல்வரின் செயல் திட்டமாய் செயல்பட்டு, அனுதினமும் தமிழ்நாட்டின் வளர்ச்சிக்காக, அயராது உழைக்கும் எங்கள் இளம் அமைச்சரே, உங்களுக்கு எந்தன் சிரம் தாழ்ந்த அவை வணக்கம்.

இவ்வவையில் நடுவராக இருந்து எங்களை வழி நடத்தும் பெருமதிப்பிற்குரிய பேரவைத் தலைவர் அவர்களுக்கும், பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கும் அவை முன்னவர் அவர்களுக்கும், அமைச்சர் பெருமக்களுக்கும் எனது மாவட்ட அமைச்சர்களான சட்டத் துறை மற்றும் சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை அமைச்சர் துறைகளினுடைய அமைச்சர்களுக்கும், தலைமை அரசு கொறடா அவர்களுக்கும், கூட்டணிக் கட்சி தலைவர்கள் மற்றும் அனைத்து சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் உங்கள் அனைவருக்கும் எனது வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். என்மீது நம்பிக்கை வைத்து எனக்கு வாக்களித்து இந்தப் பெருமைமிகு பேரவைக்கு என்னை அனுப்பி வைத்த உயிரினும் மேலான புதுக்கோட்டை தொகுதி மக்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொண்டு எனது உரையைத் துவங்குகிறேன்.

பேரவைத் தலைவர் அவர்களே, உலகம் முழுவதும் ரஷ்யா, கியூபா, சீனா உள்ளிட்ட பல நாடுகளில் ஒடுக்குமுறைக்கு உள்ளாகிய மக்கள் பெரும் புரட்சிக்குப் பிறகு ஆதிக்க வர்க்கத்தோடு போரிட்டு, இரத்தம் சிந்தி, பெரும் மக்கள் போராட்டத்திற்கு பிறகுதான் அவர்களின் உரிமைகளை பெற்றுள்ளனர். ஆனால், தமிழ்நாட்டில் மட்டும்தான் பலவிதமான ஒடுக்குமுறைகளுக்கு உள்ளாகி இருந்த மக்கள் ஓர் இயக்கத்தின்விழிப்புணர்வு பிரச்சாரத்தின் மூலமாக தனக்கான உரிமைகளை பெற்றுள்ளனர் என்றால் அந்தப் பெருமை திராவிட இயக்கத்திற்கு மட்டுமே சாரும்.

அந்த திராவிட வழி வந்த எங்கள் தலைவரின் செயல் திட்டங்களாலும் எங்கள் தலைவரின் திராவிட தளபதி சின்னவர் அவர்களது சூறாவளி பிரச்சாரத்தின்மூலம் இந்தியா முழுக்க ஆதிக்கம் செலுத்திய பாசிச சக்திகளுக்கு எதிராக விழிப்புணர்வு ஏற்படுத்தி, தமிழ்நாட்டில் 40க்கு 40 எனும் இமாலய வெற்றியை பெற்றுத் தந்து, தான் தான் திராவிட எதிர்காலம் என்பதை நிரூபித்துள்ள சின்னவர் (மேசையைத் தட்டும் ஒலி) அவர்களின் துறை சார்ந்த மானியக் கோரிக்கையிலே உரையாற்றுவதில் பெருமகிழ்ச்சியடைகிறேன்.

நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம் என்ற பழமொழி உண்டு. நோயற்ற வாழ்வைப் பெறுவதற்கு எளிய வழி விளையாட்டுதான்.

பேரவைத் தலைவர் அவர்களே, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் தமிழ்நாட்டு இளைஞர்களிடையே விளையாட்டுத் திறன்களை வளர்ப்பதிலும் தமிழ்நாட்டில் சர்வதேச தரத்திலான உள்கட்டமைப்புகளை உருவாக்க 1999ல் விளையாட்டுத் துறையை ஏற்படுத்தி, 2000 ஆம் ஆண்டு அதைத் தனித் துறையாக்கி இளைஞர்களின் வளர்ச்சிக்கு ஊக்கமளித்தார்.

சமூக நீதியில் இந்தியாவின் தலைநகராக தமிழ்நாடு திகழ்வதுபோல், தற்போது சின்னவர் தலைமையில் செயல்படும் தமிழ்நாட்டின் விளையாட்டுத் துறையானது, இந்தியாவின் விளையாட்டுத் துறையின் தலைநகரமாக திகழ்கிறது.

குறிப்பாக இந்த துறை இளைஞர்களை, நல்வழிப்படுத்தும் துறை, ஒரு நாட்டின் எதிர்காலம் என்பது இளைஞர்களின் கையில் தான் உள்ளது. அந்தவகையில் இளைஞர்களை நல்வழிப்படுத்தவும், இளைஞர்களின் வளர்ச்சிக்காகவும் செயல்படும் இத்துறை, எதிர்கால தமிழ்நாட்டை கட்டமைக்கும் துறை என்றே கூறலாம். முன்பெல்லாம் உலக அளவில் நடத்தப்படும் விளையாட்டுப் போட்டிகள் என்றால் அதில் சீனா, அமெரிக்கா உள்ளிட்ட நாடுகளின் ஆதிக்கமே அதிகமாக காணப்படும். ஆனால் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பொறுப்பேற்ற பிறகு பல சர்வதேச விளையாட்டுப் போட்டிகள் தமிழ்நாட்டில் நடத்தப்படுகின்றன.

இவை உலக அளவில் இந்தியாவிற்கே பெருமை சேர்க்கிறது. ஒருபுறம் தேசமே வியந்து பார்க்கும் அளவிற்கு Khelo India விளையாட்டுப் போட்டியை தமிழ்நாடு வெற்றிகரமாக நடத்தி முடிக்க, இன்னொரு புறம் அடுக்கடுக்கான சர்வதேச போட்டிகளை தமிழ்நாட்டில் நடத்தி அதிரடி காட்டி இருக்கிறது இத்துறை.

#### ஏழை மாணவர்களின் கனவு நனவாகியுள்ளது!

ஏழையெளிய மாணவர்களுக்கு திறன் மேம்பாட்டு பயிற்சிக்காக வெளிநாடு செல்வது என்பது எட்டாக் கனியாகவே இருந்தது.



ஆனால் சிறப்பு திட்ட செயலாக்கத் துறை அமைச்சராக சின்னவர் அவர்கள் பொறுப்பேற்ற பிறகு நான் முதல்வன் திட்டத்தின் வழியே அரசுப் பள்ளியில் பயின்று புதுமைப்பெண் திட்டத்தின்கீழ் மாதம் ரூபாய் 1,000 உதவித் தொகை பெறும், விளிம்பு நிலை மாணவிகள் இருவர் உட்பட 25 சாமானிய மாணவர்கள் திறன் மேம்பாட்டு பயிற்சிக்காக London சென்று ஒரு வார பயிற்சிக்குப் பிறகு நாடு திரும்பி உள்ளனர்.

இதன்மூலம் ஏழை மாணவர்களின் மிகப்பெரிய கனவு, எல்லோருக்கும் எல்லாம் என்ற திராவிட மாடல் ஆட்சியில் சின்னவர் அவர்களால் நினைவாகியுள்ளது.

கழக அரசு Tamil Nadu Champions Foundation என்ற அமைப்பை துவங்கி யதன் மூலம் பொருளாதார ரீதியில் பின்தங்கியுள்ள விளையாட்டு வீரர், வீராங்கனைகள் சர்வதேச போட்டிகளுக்குச் சென்று பங்கேற்கும் கனவு நினைவாகி யுள்ளது. அண்ணன் ஸ்தானத்தில் இருந்து தனது தம்பி தங்கைகளின் சர்வதேச பதக்க கனவுகளை நினைவாக்கி யுள்ளார் சின்னவர் அவர்கள்.

இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலோடு செயல்படும் இத்துறையின் மிகப்பெரிய சாதனை CM Trophy விளையாட்டுப் போட்டிகள் என்று கூறலாம்.

பல வருடங்களாக, மாணவர்களுக்கு இடையே மட்டும் நடத்தப்பட்டு வந்த விளையாட்டுப் போட்டிகள், திராவிட model ஆட்சியில் மாணவர்கள், மாற்றுத்திறனாளிகள், பொதுமக்கள், அரசு அதிகாரிகள் உள்ளிட்ட பல பிரிவுகளில் இருபாலருக்கும் தனி தனியே என பல்வேறு பிரிவுகளின்கீழ் மிகப் பிரமாண்டமாக நடத்தப்பட்டது.

வரலாற்றில் இது போன்ற ஒரு நிகழ்வு மாநில அரசால் நடத்தப்பட்டது இதுவே முதல் முறை. அதுவும் மாவட்ட அளவில் வெற்றி பெற்று மாநில அளவில் பங்கேற்க சென்ற விளையாட்டு வீரர்களுக்கு, அரசு சார்பாக செய்யப்பட்டிருந்த ஏற்பாடு அனைத்துத் தரப்பு மக்களாலும், வெகுவாக பாராட்டப்பட்டது மட்டுமல்லாமல், அனைவரும் வியக்கும் வண்ணம் இருந்தது. கடந்த ஆட்சியாளர்களைப்போல பங்கேற்கும் வீரர்கள் அனைவருக்கும் போக்குவரத்து, உணவு உள்ளிட்டவற்றிற்கு பத்தும், பத்தாத அளவிற்கு கடனுக்கென்று stipend வழங்கி கடமையை முடிக்காமல், விளையாட்டு வீரர்கள் அவர்களை சொந்த மாவட்டத்தில் இருந்து சென்னை வருவதற்கு தனி பேருந்து வசதிகள், அவர்கள் தங்குவதற்கு தரம் மிக்க விடுதிகள், விடுதியில் இருந்து போட்டி அரங்கிற்கு தனி பேருந்து வசதி, குளிரூட்டப்பட்ட உள்விளையாட்டு அரங்கங்கள் மற்றும் ஓய்வறைகள், பங்கேற்கும் அனைத்து வீரர்களுக்கும் ஒரே மாதிரியான சீருடைகள், நேரத்திற்கு தரமான உணவு என அனைத்தும் சர்வதேச தரத்தில் போட்டிகள் அமைந்திருந்ததை பார்த்து விளையாட்டு வீரர்களுக்கான உரிய அங்கீகாரம் இந்த திராவிட மாடல் அரசு வழங்கி இருப்பதாக மனம் நெகிழ்ந்து பாராட்டினார்கள். இந்த போட்டியில் மாவட்ட அளவில் முதலிடம் பெற்று மாநில அளவில் பங்கேற்ற விளையாட்டு வீரர்களுள் நானும் ஒருவன் என்ற முறையில் விளையாட்டு வீரர்களுக்கு உரிய அங்கீகாரம் வழங்கிய மக்கள் போற்றும் அரசிற்கு இவ்வகையில் நன்றி கூற கடமைப்பட்டுள்ளேன்.

#### பயிற்சியாளர்களுக்கு ஊக்கத் தொகையுடன் விருது வழங்க கோரிக்கை!

முன்பொரு காலத்தில் இதர பிற்படுத்தப்பட்டோருக்கு கல்வி உரிமை மறுக்கப்பட்டு ஒரு சாரார் மட்டுமே கல்வி கற்கவேண்டும் என்ற கூற்றை முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் உடைத்தெறிந்தார்கள், அவர் வழிவந்த நம் இளந்தலைவர். வசதி படைத்தோர் மட்டும்தான் விளையாட்டில் சாதிக்க முடியும் என்ற நிலையை மாற்றி ஏழையெளிய பிள்ளைகளையும் சர்வதேச நாடுகளுக்கு அழைத்து சென்றுள்ளார். சிறப்பாக செயல்படுபவர்களை ஊக்குவிப்பது அவர்களை இன்னும் வேகமாக செயல்பட தூண்டும், அந்த வகையில் பயிற்சியாளர்களுக்கும் ஊக்கமளிக்கும் வகையில், தொடர் வெற்றி பெறும் வீரர், வீராங்கனைகளின் பயிற்சியாளர்களுக்கு ஊக்கத் தொகையுடன்கூடிய, சிறந்த பயிற்சியாளர் விருதுகள் ஆண்டுதோறும் வழங்கப்படவேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றேன்.

மூன்றாம் பாலினத்தவர்களை ஊக்குவிக்கும் பொருட்டு அனைத்து விளையாட்டுப் போட்டிகளிலும் அவர்கள் பங்கேற்க வாய்ப்பளித்து அதில் சிறந்து விளங்கும் நபர்களுக்கு தமிழ்நாடு அரசு ஊக்கத்தொகையும், அரசு வேலையில் முன்னுரிமையும் அளிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றேன். தமிழ்நாடு அரசு வழங்கும் கலைஞரின் மகளிர் உரிமைத் தொகைத் திட்டம் தமிழ்நாட்டு மகளிரிடம் மிகப்பெரிய வரவேற்பை பெற்றுள்ளது. எனினும் ஒரு சில தகுதி வாய்ந்த மகளிருக்கு ஆவண பதிவேற்றலில் நிகழ்ந்திருக்கும் சிறு சிறு தவறுகளால் உரிமைத் தொகை கிடைக்க பெற முடியாத சூழல் நிலவுகிறது, அவர்களின் ஆவணங்களை மீண்டும் சரி பார்த்து, தகுதி வாய்ந்த மகளிருக்கு உரிமைத் தொகை வழங்க நடவடிக்கை மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

கிராம ஊராட்சிகளில் செயல்படுத்தப்படும் Kalaignar Sports Kit (Tamil Nadu Kalaignar Sports Kit Scheme) திட்டம் பேரூராட்சிகள், நகராட்சிகள், மாநகராட்சிகளுக்கு விரிவுப்படுத்தி வழங்கினால் ஏனைய பகுதி சார்ந்த மாணவர்கள் அதிக அளவில் பயன்பெறுவார்கள். எனவே இத்திட்டத்தினை நிறைவேற்றி தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

#### அரசுப்பள்ளி வறுமையின் அடையாளமல்ல; பெருமையின் அடையாளம்!

பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஷ் அவர்களின் அறிவுறுத்தலின் பெயரில் அரசுப் பள்ளி வறுமையின் அடையாளம் அல்ல, பெருமையின் அடையாளம் என்பதை உறுதி செய்திடும் வகையில், எனது தொகுதிக்குட்பட்ட அரசு பள்ளிகளுக்கு தொடர்ந்து நான் சென்று மாணவர்களை சந்திப்பதுண்டு, அப்போது அவர்கள் என்னிடம் முன் வைக்கும் கோரிக்கைகளுள் ஒன்று . . .

PT periodகளை மற்ற ஆசிரியர்கள் பெற்று அவர்கள் வகுப்பை எடுக்கிறார்கள் என்று கூறினார்கள். இதை நேரடியாக சில மாணவிகள் விளையாட்டுத் துறை அமைச்சர் அவர்களிடம் கோரிக்கையாக தெரிவித்துள்ளனர். இதற்கு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்களும் PT periodகளை மாணவர்களின் புத்துணர்ச்சிக்காக வழங்கப்படும் வகுப்புகள்தான், அதை மற்ற ஆசிரியர்கள் பயன்படுத்தக்கூடாது என்று அறிவுறுத்தி இருக்கிறார்கள்.

இதனை ஆசிரியர்களுக்கு உறுதிப்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மாவட்டங்களில் செயல்பட்டு வருகிற தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் விளையாட்டு அரங்கங்களை நவீனப்படுத்திடவும், அவற்றை மேம்படுத்தவும் நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் உருவாக்கப்பட்ட புதுக்கோட்டை மாவட்டத்திற்கு கலைஞர் நூலகம் அமைத்துத் தரும்படி கேட்டுக்கொள்கிறேன். புதுக்கோட்டை மாவட்ட விளையாட்டு அரங்கில், கடந்த கால ஆட்சியின்போது குளறுபடியான திட்ட மதிப்பீட்டினால்

பாதியில் நிறுத்தப்பட்ட உள்விளையாட்டு அரங்கம், பயனற்ற நிலையில் கட்டடம் மட்டும் உள்ளது, அமைச்சரின் கவனத்திற்கு கொண்டு சென்ற நிலையில், துறை ரீதியான நிதி ஒதுக்கீடு செய்து பணிகளை மீண்டும் ஆவன செய்து முடிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். இளைஞர் நலனில் முக்கிய பங்கு இளைஞர்களுக்கான உயர் கல்வியும், வேலைவாய்ப்பும். அதனடிப்படையில் புதுக்கோட்டை மாவட்ட இளைஞர்கள் இரண்டிலும் தன்னிறைவு பெறவில்லை. கல்வி மற்றும் வேலைவாய்ப்புக்கு அருகாமை மாவட்டத்தையே நாட வேண்டிய சூழல் இருக்கிறது. ஆகையால் அரசு சார்பாக புதுக்கோட்டையில் தொழில்நுட்பம் மற்றும் பொறியியல் கல்லூரியும், சட்டக் கல்லூரியும், கால்நடை மருத்துவக் கல்லூரியும், மேலும் வேலைவாய்ப்பிற்காக புதுக்கோட்டை SIPCOT பகுதியை தரம் உயர்த்தி புதுக்கோட்டை இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பினை உருவாக்கித் தரும் வண்ணம் துறை சார்ந்த அமைச்சர் பெருமக்களிடம் பேசி இளைஞர்களின் நலன் காக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

#### புதுக்கோட்டையில் பிரத்யேக ஜல்லிக்கட்டு களமமைக்க கோரிக்கை!

தமிழர்களின் பாரம்பரிய விளையாட்டான சிலம்பக் கலையில் தமிழகத்திற்கு முன்மாதிரியாக விளங்கும் புதுக்கோட்டை மாவட்ட வீரர்களை ஊக்குவிக்கும் விதமாக அரசு சார்பாக புதிய சிலம்ப பயிற்சி மையம் அமைத்துத் தரும்படி கேட்டுக்கொள்கிறேன். தமிழர்களின் வீர விளையாட்டான ஜல்லிக்கட்டு போட்டியை தமிழ்நாட்டில் அதிக வாடிவாசல்களை கொண்ட மாவட்டமாக, அதிக ஜல்லிக்கட்டு போட்டிகளை நடத்தும் மாவட்டமாக திகழும் புதுக்கோட்டை மாவட்டத்தில் பிரத்யேக ஜல்லிக்கட்டு களம் அமைத்துத் தருமாறு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். புதுக்கோட்டை மாவட்டம் என்பது. . .(மணியடிக்கப்பெற்றது)

புதுக்கோட்டை மாவட்டம் என்பது பொருளாதார நிலையில் மிகவும் பின் தங்கிய குடும்பங்கள் வாழும் மாவட்டமாகும், பெரும்பாலான மக்கள் 100 நாள் வேலை திட்டத்தையே தனது வாழ்வாதாரமாகக் கொண்டுள்ளனர். தற்போது புதுக்கோட்டை நகராட்சி, மாநகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டதைத் தொடர்ந்து அதைச் சுற்றியுள்ள ஊராட்சிப் பகுதி மக்கள் 100 நாள் வேலைத் திட்டத்தை இழக்கும் சூழ்நிலை உருவாகியுள்ளது. ஆகையால் அவர்களின் வாழ்வாதாரத்தைக் காப்பதற்கு சிறப்புத் திட்ட செயலாக்கத் துறையின்கீழ் ஒரு திட்டத்தினை வகுத்துத் தரும்படி அமைச்சர் அவர்களிடம் கேட்டுக்கொள்கிறேன்.

அரசு பணிகளில் பணியாற்றிவரும் 50 வயதுக்கு மேற்பட்ட கை, கால் திறன் குறைபாடுடைய மாற்றுத் திறனாளிகளுக்கு TNPSC நடத்தும் துறைத் தேர்வுகளிலிருந்து விலக்களிக்க வேண்டுமென்று அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

தமிழ் இருக்கும் வரை உங்கள் புகழ் இருக்கும், தமிழன் இருக்கும் வரை உங்கள் பெயர் நிலைக்கும், அழிக்க நினைப்போர் அற்று வீழ்வரே, அழியாத உங்கள் புகழ் என்றும் வாழ்கவே! என்று உரைத்த முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள் வாக்கில் உதயமான உதய சூரியனுக்கு நன்றி கூறி என் உரையை நிறைவு செய்கிறேன்.

இவ்வாறு கழக உறுப்பினர் வை.முத்துராஜா பேசினார்.



விக்கிரவாண்டி இடைத்தேர்தலில் காணை தெற்கு ஒன்றியம் கொண்டாகுப்பம் பாகம்58 ல் சென்னை மேற்கு மாவட்ட இளைஞர் அணி சார்பில் மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் வழக்கறிஞர் பா.பிரகாஷ் தலைமையில் கழக வெற்றி வேட்பாளர் அன்னியூர் ஏ.சிவாவுக்கு உதயசூரியன் சின்னத்திற்கு வாக்கு சேகரித்தனர். உடன் மாவட்ட துணை அமைப்பாளர்கள் கே.குட்டி,ஜே.எம்.எச். இம்ரான், பா.பாலசந்தர், கே.தினேஷ்குமார், என்.மோகன்வேல் மற்றும் கிளை செயலாளர் ஏ. பிரகாஷ் பாகத்திற்கு உட்பட்ட கழக தோழர்கள் உடன் இருந்தனர்